## மாநில திட்ட இயக்ககம், சென்னை-06

## ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

**அனுப்புநர்**

மாநில திட்ட இயக்குநர்,
மாநில திட்ட இயக்ககம்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
டி.பி.ஜ. வளாகம்,
சென்னை – 06.

**பெறுநர்**

முதன்மைக் கல்வி அலுவலர்,
அனைத்து மாவட்டங்கள்.

ந.க.எண்.449/C7/ஒபக/பமேகு/நாள். 16.03.2022

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – அனைத்து அரசு பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு - வழிகாட்டுதல்கள் - சார்பு.

.......

| |
|---|
| மாநிலம் தழுவிய பள்ளி மேலாண்மைக் குழு சார்ந்த பெற்றோருக்கான விழிப்புணர்வு கூட்டம் : **20.03.2022, காலை: 10.00 மணி முதல் 1.00 மணி வரை.** இதற்கான அழைப்பிதழை பள்ளியில் பயிலும் மாணவர்களின் மூலம் அவர்களின் பெற்றோர்களுக்கு 18.03.2022 (**வெள்ளிக்கிழமை**) க்குள் அனுப்பிவைக்க வேண்டும். அழைப்பிதழின் நகல் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. |
| மாநிலம் தழுவிய பள்ளி மேலாண்மைக் குழுக்கள் மறுகட்டமைப்பு நாள்: **ஏப்ரல் முதல் வாரத்தில் இருந்து நடைபெறும்.** இதற்கான விரிவான கால அட்டவணை பின்னர் தெரிவிக்கப்படும். |

## அறிமுகம்

பள்ளியின் முன்னேற்றத்திற்காகவும், பள்ளிச் வளர்ச்சிக்குத் துணை நிற்கவும் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்- 2009ன் படி பள்ளி மேலாண்மைக் குழு உருவாக்கப்பட்டுள்ளது.

நம் குழந்தைகளின் தரமானக் கல்வியை உறுதி செய்திடவும், அரசு பள்ளிகளை மேம்படுத்துவதற்கும், பெற்றோர்களின் பங்கேற்பு மிக முக்கியமானது என்று கல்வி உரிமை சட்டம் வலியுறுத்துகிறது.

மாநிலம் முழுவதும் பள்ளிமேலாண்மைக் குழுக்களை மறுகட்டமைப்பு செய்வது என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு முறையான பயிற்சியளித்து இக்குழுக்களைச் சிறப்பாகச் செயல்பட ஊக்கம் அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே பள்ளிக் கல்வித்துறை, பள்ளி மேலாண்மைக்குழுக்களை வலுப்படுத்தி அவை சிறப்பாக செயல்பட வழிகாட்ட மாநில மற்றும் மாவட்ட அளவிலான கருத்தாளர்களுக்குப் பயிற்சியளித்துள்ளது. இவர்கள் வாயிலாக பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்- 2009ன் படி இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பள்ளி மேலாண்மைக்குழுக்களை மறுகட்டமைப்பு செய்வது அவசியமாகிறது. பள்ளி மேலாண்மைக்குழுக்களுக்குப் பெற்றோர்களில் இருந்து 15 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் ஒளிவு மறைவற்ற முறை பின்பற்றப்பட வேண்டும். பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளின் பெற்றோர்களே தங்களின் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க வேண்டும். பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் சிறப்பாக செயல்பட வேண்டுமென்றால் அவர்களின் உள்ளார்ந்த விருப்பமும், ஈடுபாடும் பள்ளி வளர்ச்சிக்கான செயல்பாடுகளுக்கு நேரம் ஒதுக்குவதும் மிகவும் அவசியமாகும்.

அரசாணை எண்.42 நாள். 06.03.2019-ன் படி பள்ளி மேலாண்மைகுழு உறுப்பினர் விவரம்

| வ. எண் | வகை | எண்ணிக்கை | பதவி | முன்னுரிமை |
|---|---|---|---|---|
| 1 | பெற்றோர் | 1 | தலைவர் | பெண் |
| 2 | பள்ளியில் பயிலும் மாற்றுத் திறனாளி மாணவர்களின் பெற்றோர், பள்ளியில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களாக உள்ள தூய்மை பணியாளர்கள், எய்ட்ஸ் நோயாளிகள் மற்றும் திருநங்கைகள் அல்லது SC/ST வகுப்பைச் சார்ந்த குழந்தையின் பெற்றோர். | 1 | துணைத்தலைவர் | |
| 3 | தலைமையாசிரியர் | 1 | உறுப்பினர் மற்றும் கூட்ட அழைப்பாளர் (*Convenor*) | பெண்-1 |
| 4 | ஆசிரியர் பிரதிநிதி | 1 | உறுப்பினர் | |
| 5 | பெற்றோர் பிரதிநிதிகள் (SC, ST, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினர் உட்பட) | 12 | உறுப்பினர் | பெண்கள்-7 |
| 6 | உள்ளாட்சிப் பிரதிநிதிகள் | 2 | உறுப்பினர் | பெண் – 1 |
| 7 | கல்வி ஆர்வலர்/ புரவலர்/ அரசு சாரா அமைப்பினர்/ ஓய்வு பெற்ற ஆசிரியர் | 1 | உறுப்பினர் | |
| 8 | சுய உதவிக்குழு உறுப்பினர் (பெற்றோர்) | 1 | உறுப்பினர் | பெண்-1 |
| | மொத்த உறுப்பினர்கள் | 20** | | |

**மொத்த உறுப்பினர்களில் 75%, அதாவது 15 உறுப்பினர்கள் பெற்றோர்களாக இருக்க வேண்டும். அவர்களுள் குறைந்தபட்சம் 10 பெண் உறுப்பினர்கள் கட்டாயமாக இடம் பெற்றிருக்க வேண்டும்.

1. <u>பெற்றோர் உறுப்பினர்கள் (15):</u>

அப்பள்ளியில் பயிலாத மாணவர்களின் பெற்றோர்கள் பள்ளி மேலாண்மைக் குழுவில் பெற்றோர் உறுப்பினராக இடம் பெற இயலாது. பெற்றோர்களின் பிரதிநிதித்துவம் அனைத்து சமுதாய மக்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

2. <u>ஆசிரியர் பிரதிநிதி:</u>

ஆசிரியர் பிரதிநிதி அரசாணை எண். 213 நாள். 26.12.2011-ன் படி அந்தப் பள்ளியிலுள்ள ஆசிரியர்களால் தீர்மானிக்கப்படுவார்.

3. <u>உள்ளாட்சி பிரதிநிதிகள்:</u>

i. உள்ளாட்சி பிரதிநிதி என்பவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆவர் .

ii. அரசாணை எண். 213 நாள்.26.12.2011-ன் படி உள்ளாட்சி மன்றத்தால் தீர்மானிக்கப்படுவர்.

iii. ஊராட்சி பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிகளின் பள்ளி மேலாண்மைக் குழுவில் இடம் பெறும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதற்கான இவர்களது தெரிவை ஊராட்சி மன்றம் தீர்மானிக்கும்.

| பள்ளிகளின் எண்ணிக்கை | உள்ளாட்சி பிரதிநிதி எண்ணிக்கை | ஊராட்சி உறுப்பினர் விவரம் |
|---|---|---|
| ஊராட்சியில் ஒரு பள்ளி மட்டும் அமைந்து இருந்தால் | 2 | 1. ஊராட்சி தலைவர் |
| | | 2. அந்த பள்ளி அமைந்துள்ள பகுதியின் ஊராட்சி வார்டு உறுப்பினர் அல்லது அந்த பள்ளியில் பயிலும் பெரும்பான்மையான மாணவர்களின் இருப்பிடம் சார்ந்த வார்டு உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| | | அல்லது பள்ளியில் பயிலும் மாணவரின் பெற்றோர் வார்டு உறுப்பினராக இருக்கும் பட்சத்தில் அவருக்கு முன்னுரிமை அளிக்கலாம். |
| ஒரு ஊராட்சியில் ஒன்றுக்கு மேற்பட்ட பள்ளி அமைந்து இருந்தால் | 2 | நிகழ்வு-1 (முதல் பள்ளியில்)<br>1. ஊராட்சி தலைவர்<br>2. அந்த பள்ளி அமைந்துள்ள பகுதியின் ஊராட்சி வார்டு உறுப்பினர் அல்லது அந்த பள்ளியில் பயிலும் பெரும்பான்மையான மாணவர்களின் இருப்பிடம் சார்ந்த வார்டு உறுப்பினர் அல்லது பள்ளியில் பயிலும் மாணவரின் பெற்றோர் வார்டு உறுப்பினராக இருக்கும் பட்சத்தில் அவருக்கு முன்னுரிமை அளிக்கலாம். |
| | | நிகழ்வு-2 (இரண்டாவது பள்ளியில்)<br>1. அந்த பள்ளி அமைந்துள்ள பகுதியின் ஊராட்சி வார்டு உறுப்பினர்.<br>2. அந்த பள்ளியில் பயிலும் பெரும்பான்மையான மாணவர்களின் இருப்பிடம் சார்ந்த வார்டு உறுப்பினர் அல்லது பள்ளியில் பயிலும் மாணவரின் பெற்றோர் வார்டு உறுப்பினராக இருக்கும் பட்சத்தில் அவருக்கு முன்னுரிமை அளிக்கலாம்.<br>**இரண்டிற்கும் மேற்பட்ட பள்ளிகள் இருந்தால் இதே முறையைப் பின்பற்ற வேண்டும். |

மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிகளின் பள்ளி மேலாண்மைக் குழுவில் இடம் பெறும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதற்கான தேர்வை உள்ளாட்சி மன்றம் தீர்மானிக்கும்.

| பள்ளிகளின் எண்ணிக்கை | உள்ளாட்சி பிரதிநிதி எண்ணிக்கை | உள்ளாட்சி உறுப்பினர் விவரம் |
|---|---|---|
| மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் ஒரு பள்ளி மட்டும் அமைந்து இருந்தால் | 2 | 1. அந்த பள்ளி அமைந்துள்ள பகுதியின் உள்ளாட்சி வார்டு உறுப்பினர் |
| | | 2. அந்த பள்ளியில் பயிலும் பெரும்பான்மையான மாணவர்களின் இருப்பிடம் சார்ந்த வார்டு உறுப்பினர் அல்லது பள்ளியில் பயிலும் மாணவரின் பெற்றோர் வார்டு உறுப்பினராக இருக்கும் பட்சத்தில் அவருக்கு முன்னுரிமை அளிக்கலாம். |
| மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட பள்ளி அமைந்து இருந்தால் | 2 | 1. அந்த பள்ளி அமைந்துள்ள பகுதியின் உள்ளாட்சி வார்டு உறுப்பினர்<br>2. அந்த பள்ளியில் பயிலும் பெரும்பான்மையான மாணவர்களின் இருப்பிடம் சார்ந்த வார்டு உறுப்பினர் அல்லது பள்ளியில் பயிலும் மாணவரின் பெற்றோர் வார்டு உறுப்பினராக இருக்கும் பட்சத்தில் அவருக்கு முன்னுரிமை அளிக்கலாம். |

4. கல்வி ஆர்வலர் / அரசு சாரா அமைப்பினர்/ ஓய்வு பெற்ற அசிரியர்/ புரவலர்:

i. கல்வி ஆர்வலர், அரசு சாரா அமைப்பினர், ஓய்வு பெற்ற ஆசிரியர் என்பவர் கற்றலை மேம்படுத்தும் இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தில் சிறப்பாக செயல்படுபவராகவும் மாணவர்களின் நலனில் அதிக அக்கறை கொண்டவராகவும் மற்றும் பள்ளி அமைந்துள்ள அதே பகுதி குடியிருப்புகளில் வசிப்பவராகவும் இருக்க வேண்டும்.

ii. ஒன்றுக்கும் மேற்பட்ட இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்கள் உறுப்பினராக செயல்பட விருப்பம் தெரிவிக்கும் பட்சத்தில், பெரும்பான்மையான பெற்றோர்கள் தேர்வு செய்யும் தன்னார்வலர் உறுப்பினராகலாம்.

iii. புரவலர் என்பவர் பள்ளியின் வளர்ச்சிக்காக பணமாகவோ, பொருளாவோ கடந்த ஐந்தாண்டுகளில் நன்கொடை அளித்தவர்களில் ஒருவர் பள்ளி மேலாண்மைக் குழுவில் உறுப்பினர் ஆகலாம். நன்கொடை அளித்ததற்கான ஆதார ஆவணத்தை சமர்பிக்க வேண்டும்.

iv. கல்வி ஆர்வலர், புரவலர், ஓய்வு பெற்ற ஆசிரியர், அரசு சாரா அமைப்பினர் இவர்களில் ஒருவர் மட்டுமே பள்ளி மேலாண்மைகுழு உறுப்பினராக இருக்கலாம்.

5. உறுப்பினர் - கூட்ட அழைப்பாளர் (Member - Convenor):

i. பள்ளியின் தலைமையாசிரியர் பள்ளி மேலாண்மைக்குழுவில் பதவி வழி உறுப்பினராக இடம்பெறுவார். மேலும், தலைமையாசிரியர் பள்ளி மேலாண்மைக்குழு கூட்டங்களைக் கூட்டும் கூட்ட அழைப்பாளராக (*Convenor*) செயல்படுவார்.

ii. தலைமையாசிரியர் இல்லாத நேர்வுகளில் பள்ளியின் மூத்த ஆசிரியர் பள்ளி மேலாண்மைக்குழு கூட்டங்களைக் கூட்டும் கூட்ட அழைப்பாளராக (*Convenor*) செயல்படுவார்.

<u>6. சுய உதவிக்குழு உறுப்பினர் (பெற்றோர்):</u>

i. சுய உதவிக்குழுகளில் இடம்பெற்றுள்ள, பள்ளியில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களில் ஒருவர் பள்ளி மேலாண்மைக்குழுவின் உறுப்பினராக தேர்வு செய்யப்படுவார். சுய உதவிக் குழுவின் ஊக்குநர் தலைவர், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு (Panchayat Level Federation) முன்னுரிமை அளிக்கலாம்.

ii. சுய உதவிக்குழுகளில் இடம்பெற்றுள்ள, பள்ளியில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களில் ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் பள்ளி மேலாண்மைக்குழுவின் உறுப்பினராக விருப்பம் தெரிவிக்கும் நேர்வுகளில் பெரும்பான்மை பெற்றோரின் விருப்பப்படி தேர்வு செய்யப்படுவார்.

<u>பெற்றோர்களுக்கு மறுகட்டமைப்பு குறித்த தகவல் தெரிவித்தல்</u> :

மாநில மற்றும் மாவட்ட கருத்தாளர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர் மூலமாக பயிற்சி பெற்ற இல்லம் தேடிக் கல்வி மைய தன்னாவலர்கள் மூலம் மையங்களில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களுக்கு பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு குறித்து விளக்கமும் மறுகட்டமைப்பு நாளில் பள்ளிக்கு வருகை புரிவது மற்றும் மறுகட்டமைப்பில் பங்கு பெறுவதன் அவசியம் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மறுகட்டமைப்பு நடத்துவதற்கு முன்பு மார்ச் 20 அன்று பெற்றோர்களுக்கு தலைமையாசிரியர், ஆசிரியர்கள், மாநில மற்றும் மாவட்ட கருத்தாளர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர் மூலமாக பெற்றோர்களுக்கு பள்ளி மேலாண்மைக் குழு

மறுகட்டமைப்பு. அதன் செயல்பாடுகள். உறுப்பினர்களின் பொறுப்புகள் மற்றும் கடமைகள் குறித்து விளக்க கூட்டம் நடத்த வேண்டும்.

i. பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு தொடர்பான அழைப்புக் கடிதத்தைத் தயார் செய்து பெற்றோர்களுக்கு அனுப்பவேண்டும் அல்லது ஆசிரியர்கள் தங்கள் வகுப்பில் பயிலும் மாணவர்களின் நோட்டுப்புத்தகத்தில் அதற்கான அழைப்புக் கடிதத்தை எழுதி அனுப்ப வேண்டும். பெற்றோர்களின் கையொப்பம் அழைப்புக் கடிதத்தில் பெற்று அவர்களின் பங்களிப்பை உறுதி செய்ய வேண்டும்.

ii. பெற்றோருக்கான அழைப்பிதழ் தொடர்பான துண்டு ரசுரங்கள் பள்ளியில் படிக்கின்ற குழந்தைகள் மூலம் கொடுத்து அனுப்பலாம்.

iii. பள்ளி மேலாண்மைக்கு மறுகட்டமைப்பு குறித்த தகவல்களை மக்கள் அதிகம் பார்க்கும் முக்கிய இடங்களில் (எ.கா.) ரேஷன் கடைகள், பஞ்சாயத்து அலுவலகம் / நகராட்சி அலுவலகம் / சமுதாயக் கூடம் (அல்லது) மின்கட்டணம் செலுத்தும் மின்வாரிய அலுவலகம் பார்வையில் படும்படியாக வைக்கலாம்.

iv. வாட்ஸ்அப் செய்திகள் மூலம் பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு நடைபெறுவது குறித்து பெற்றோர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

v. மக்கள் கூடுகின்ற முக்கிய இடங்களில் பள்ளி மேலாண்மைக்குழு குறித்த விழிப்புணர்வு பதாகைகள் (பேனர்) வைக்கலாம்.

இத்தகைய நிகழ்வுகளின் மூலம் பள்ளி மேலாண்மை குழு மறுகட்டமைப்பிற்கு பெற்றோர்களின் வருகை மற்றும் பங்களிப்பை உறுதி செய்ய வேண்டும்.

**<u>பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்</u>** :

பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களை தெரிவு செய்யும் நடைமுறையை பதவி வழி தலைமையேற்று நடத்தும் அலுவலராக பள்ளியின் தலைமையாசிரியர் செயல்படுவார்.

மாவட்ட ஆட்சியர் அவர்களால் நியமிக்கப்படும் அரசு அலுவலர் ஒருவர் இந்நிகழ்வில் பார்வையாளராக கலந்து கொண்டு தலைமையாசிரியருக்கு தக்க உதவிகளைச் செய்வார்.

**<u>மறுகட்டமைப்பு செய்யும் வழிமுறைகள்</u>**:

i. மாணவர்களின் பெயர், பயிலும் வகுப்பு மற்றும் அவர்களின் பெற்றோரின் பெயர், முகவரி அடங்கிய பட்டியலை மறுகட்டமைப்பு நடைபெறும் ஏழு நாட்களுக்கு முன்பாக தயார் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். **இத் தகவல்களை கல்வி மேலாண்மைத் தகவல் முறைமையிலிருந்து (EMIS) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். (படிவம் – 1)**

ii. மறுகட்டமைப்பு நடைபெறும் நாளில், குறிப்பிட்ட நேரத்தில் அனைத்துப் பெற்றோர்களும் வரவழைக்கப்பட்டு, பள்ளி வளாகத்தில் போதிய இடவசதியுள்ள அறை அல்லது திறந்த வெளியில் அமரவைக்கப்பட வேண்டும். அதிக எண்ணிக்கையில் பெற்றோர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வதை உறுதி செய்ய வேண்டும்.

iii. ஒரு மாணவரின் தாய் மற்றும் தந்தை இருவரும் மறுகட்டமைப்பு நாளில் பள்ளிக்கு வருகை புரியும் நேர்வில் அவர்களில் யாராவது ஒருவர் மட்டுமே தெரிவு செய்யும் நிகழ்வில் பங்கேற்க வேண்டும்.

iv. இட வசதி குறைவாக இருந்தால் தேவை ஏற்படின் 1 - 5 வகுப்பு மாணவர்களின் பெற்றோர்களை தனியாகவும் 6 - 8 வகுப்புகள், 9 - 10 வகுப்புகள் மற்றும் 11 - 12

வகுப்புகள் பயிலக்கூடிய மாணவர்களின் பெற்றோர்களைத் தனித்தனியாக அமரச்செய்து அவர்களுக்குரிய உறுப்பினர்களைத் தெரிவு செய்யலாம்.

v. அனைத்து வகுப்புகளில் பயிலும் குழந்தைகளின் பெற்றோர்கள் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய கீழ்கண்ட வழி முறையைப் பின்பற்றலாம்.

<u>**தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் விகிதாச்சார பிரதிநிதித்துவம்**</u> **(Proportional Representation):**

பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய 15 பெற்றோர் உறுப்பினர்களில் கீழ்க்கண்ட விகிதாரச்சார பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும்.

| வ. எண் | பள்ளி | மாணவர்கள் பயிலும் வகுப்பு அடிப்படையில் தெரிவு செய்யப்பட வேண்டிய பெற்றோர்கள் | | சுய உதவிக்குழு பெற்றோர் உறுப்பினர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | வகுப்பு | உறுப்பினர் எண்ணிக்கை** | | |
| 1 | அரசு தொடக்கப் பள்ளி | | | | |
| | 1 முதல் 5 வகுப்புகள் உள்ள பள்ளி | 1-5 | 14 | 1 | 15 |
| 2 | அரசு நடுநிலைப் பள்ளி | | | | |
| | 1 முதல் 8 வகுப்புகள் உள்ள பள்ளி | 1-5 | 8 | 1 | 15 |
| | | 6-8 | 6 | | |
| 3 | அரசு உயர்நிலைப் பள்ளி | | | | |
| | 1 முதல் 10 வகுப்புகள் உள்ள பள்ளி | 1-5 | 6 | 1 | 15 |
| | | 6-8 | 4 | | |
| | | 9-10 | 4 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 6 முதல் 10 வகுப்புகள் உள்ள பள்ளி | 6-8 | 7 | 1 | 15 |
| | | 9-10 | 7 | | |
| 4 | அரசு மேல்நிலைப் பள்ளி | | | | |
| | 1 முதல் 12 வகுப்புகள் உள்ள பள்ளி | 1-5 | 3 | 1 | 15 |
| | | 6-8 | 3 | | |
| | | 9-10 | 4 | | |
| | | 11-12 | 4 | | |
| | 6 முதல் 12 வகுப்புகள் உள்ள பள்ளி | 6-8 | 5 | 1 | 15 |
| | | 9-10 | 5 | | |
| | | 11-12 | 4 | | |

**** மேற்கண்ட அட்டவணையில் உள்ள உறுப்பினர்களில் பெண் உறுப்பினர் எண்ணிக்கை குறைந்த பட்சம் 7 ஆக இருக்க முன்னுரிமை அளிக்கலாம்.**

****மாற்றுத் திறனாளி குழந்தைகளின் பெற்றோர் ஒருவராவது இடம் பெறுவதை உறுதி செய்துக் கொள்ள வேண்டும்.**

மாற்றுத் திறனாளி குழந்தைகளின் பெற்றோர் யாரும் இல்லையெனில் பள்ளியில் பயிலும் மாணவர்களின் பெற்றோராக உள்ள தூய்மை பணியாளர்கள், எய்ட்ஸ் நோயளிகள் மற்றும் திருநங்கைகள், இவர்களில் ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டும்.

பள்ளிகளில் ஏதேனும் வகுப்புகளின் பிரிவுகளில் (1 முதல் 5 வரை, 6 முதல் 8 வரை, 9 முதல் 10 வரை மற்றும் 11 மற்றும் 12 வரை) மாணவர்கள் எண்ணிக்கை அல்லது மறுகட்டமைப்பு நாளன்று வருகை தரும் பெற்றோர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தால் அந்த பிரிவில் பெற்றோர்களின் பிரநிதித்துவத்தை குறைத்துக் கொண்டு எந்த பிரிவில் மாணவர்கள் எண்ணிக்கை அல்லது மறுகட்டமைப்பு நாளன்று பெற்றோர்களின் வருகை அதிகமாக இருக்கிறதோ அந்தப்பிரிவில் பெற்றோர்களின்

பிரநிதித்துவத்தை அதிகரித்துக்கொள்ளலாம். இதனை அந்தந்த பள்ளியின் சூழ்நிலைக்கு ஏற்ப முடிவு செய்து கொள்ளலாம்.

பள்ளியில் பயிலும் மாணவர்களின் குடியிருப்புகள் அனைத்திற்கும் பிரதிநிதித்துவம் கிடைப்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

<u>தெரிவு செய்யும் வழிமுறை:</u>

i. தலைமையாசிரியரே உறுப்பினர்களை தெரிவு செய்யும் அலுவலராக இருப்பார் என்பதை கூட்டத்தின் தொடக்கத்தில் பெற்றோருக்கு தெரியப்படுத்துதல் வேண்டும்.

ii. ஆசிரியர் ஒருவர் ஒவ்வொரு பதவி, உறுப்பினருக்கான விளக்கம் மற்றும், கடமைகள் குறித்துத் தெளிவாகவும், சுருக்கமாகவும் பெற்றோர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்.

iii. விகிதாச்சார பிரிநிதித்துவ அடிப்படையில் மேற்காணும் அட்டவணையில் உள்ளபடி பெற்றோர் உறுப்பினர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

iv. பதவி வழி உறுப்பினர் தவிர மற்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட விரும்பும் நபரை பெற்றோர்களில் யாராவது ஒருவர் முன்மொழிய வேண்டும். அதை மற்றொருவர் வழிமொழிய வேண்டும்.

v. ஒருவேளை யாரும் முன் மொழியபடவில்லையென்றால், யாரெல்லாம் உறுப்பினராக விரும்புகிறீர்கள் என்று தெரிவு செய்யும் அலுவலர் கேட்கவேண்டும்.

vi. யாரெல்லாம் உறுப்பினராக விரும்புகிறார்களோ அவர்களை மேடைக்கு அழைத்து அவர்களை பெற்றோர்கள் முன்னிலையில் ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தி இவரை உறுப்பினராக தேர்ந்தெடுக்க நீங்கள் அனைவரும்

சம்மதிக்கிறீர்களா? என்று கேட்டு. சம்மதத்தை பெறவேண்டும். இதற்கு கையை உயர்த்தி சம்மதம் தெரிவிக்கும் முறையைப் பின்பற்ற வேண்டும்.

vii. சம்மதம் தெரிவிக்கும் பெற்றோரின் எண்ணிக்கையை ஒவ்வொரு போட்டியாளருக்கும் தனித் தனியாகக் கணக்கிட்டு இதற்கான படிவத்தில் குறித்துக் கொள்ள வேண்டும். (**படிவம் -2**)

viii. அதிக எண்ணிக்கையில் பெற்றோர்கள் ஆதரவை பெறும் நபரை தேர்ந்தெடுக்கப்பட்டவராக அறிவிக்க வேண்டும்.

ix. சமமான எண்ணிக்கையில் பெற்றோர்களின் ஆதரவு இருக்குமானால். சமமான எண்ணிக்கையில் ஆதரவுப் பெற்ற நபர்களின் பெயர்களைக் காகிதத் துண்டில் எழுதி அட்டைப் பெட்டியில் போட்டுக் குலுக்கல் முறையில் ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும்.

1. **<u>பதவி வழி உறுப்பினர் தேர்வு</u>** :

**i.** **உள்ளாட்சி பிரதிநிதி உறுப்பினர்கள்** – பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு நடைபெறும் மூன்று நாட்களுக்கு முன்பாக உள்ளாட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி உரிய பிரதிநிதிகளின் விவரத்தை தொடர்புடைய பள்ளித் தலைமையாசிரியருக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்த வேண்டும்.

**ii.** **ஆசிரியர் உறுப்பினர்** - ஆசிரியர்களின் ஒருமித்த கருத்துடன் ஆசிரியர் உறுப்பினரை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

2. **<u>தலைவர் தேர்வு</u>** :

பள்ளி மேலாண்மைக்குழு பெற்றோர் உறுப்பினர்களில் ஒருவர் குழு உறுப்பினர்களால் பள்ளி மேலாண்மைக்குழு தலைவராக தேர்வு செய்யப்படுவார். இத்தேர்வில் பெண் உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளிக்கலாம்.

i. ஒன்றுக்கு மேற்பட்ட பெண் உறுப்பினர்கள் பள்ளி மேலாண்மைக்குழு தலைவராக விருப்பம் தெரிவித்தால் பெரும்பான்மை உறுப்பினர்கள் தேர்வு செய்பவர் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவார்.

ii. பள்ளி மேலாண்மைக்குழு தலைவராகப் பெண் மற்றும் ஆண் உறுப்பினர்கள் விருப்பம் தெரிவிக்கும் நேர்வுகளில் முன்னுரிமை அடிப்படையில் விருப்பம் தெரிவிக்கும் பெண் உறுப்பினர்களில் ஒருவரே பெரும்பான்மை உறுப்பினர்களால் தலைவராக தெரிவு செய்யப்பட வேண்டும்.

iii. பள்ளி மேலாண்மைக்குழு தலைவராகப் பெண் உறுப்பினர்கள் யாரும் விருப்பம் தெரிவிக்கவில்லை எனில், விருப்பம் தெரிவிக்கும் ஆண் உறுப்பினர்களில் ஒருவர் பெரும்பான்மை உறுப்பினர்களால் தலைவராக தேர்வு செய்யப்படுவார்.

iv. மேற்கண்ட தகுதிவாய்ந்த உறுப்பினர்களில் தலைவராகத் தேர்வு செய்யப்பட ஒரு உறுப்பினர் முன்மொழிய வேண்டும். மற்றொரு உறுப்பினர் வழிமொழிய வேண்டும்.

v. பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு நடைபெறும் நாளிலேயே தலைவர் தெரிவு செய்யப்பட வேண்டும்.

vi. ஒன்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் தலைவராக விருப்பம் தெரிவிக்கும் நேர்வுகளில் உறுப்பினர்களின் ஆதரவை தெரிந்துக்கொள்ள அவர்களின் கையை உயர்த்தி சம்மதம் தெரிவிக்கும் முறையைப் பின்பற்ற வேண்டும்.

vii. சம்மதம் தெரிவிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஒவ்வொரு போட்டியாளருக்கும் தனித் தனியாகக் கணக்கிட்டு இதற்கான படிவத்தில் குறித்துக் கொள்ள வேண்டும். (படிவம் -3)

viii. அதிக எண்ணிக்கையில் பெற்றோர்கள் ஆதரவை பெறும் நபரை தேர்ந்தெடுக்கப்பட்டவராக அறிவிக்க வேண்டும்.

ix. சமமான எண்ணிக்கையில் உறுப்பினர்களின் ஆதரவு இருக்குமானால். அவர்களின் பெயர்களைக் காகிதத் துண்டில் எழுதி அட்டைப் பெட்டியில் போட்டுக் குலுக்கல் முறையில் ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும்.

x. தலைவர் தெரிவுக்கான முன் மொழிதல். வழி மொழிதல் பெற்ற ஆதரவு விவரங்களை இதற்கான படிவத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும். இந்த படிவத்தில் உறுப்பினர்கள் அனைவரின்கையொப்பம் பெறவேண்டும்.

<u>**துணைத் தலைவர்**</u>:

i. பள்ளியில் பயிலும் மாற்றுத் திறனாளி மாணவர்களின் பெற்றோர். பள்ளியில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களாக உள்ள தூய்மை பணியாளர்கள். எய்ட்ஸ் நோயாளிகள் மற்றும் திருநங்கைகள் அல்லது SC/ST வகுப்பைச் சார்ந்த குழந்தையின் பெற்றோர் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களால் துணைத் தலைவராக தேர்வு செய்யப்படுவார்.

ii. ஒன்றுக்கும் மேற்பட்ட தகுதியான உறுப்பினர்கள் துணைத் தலைவராக விருப்பம் தெரிவிக்கும் நேர்வுகளில் பெரும்பான்மை உறுப்பினர்களால் துணைத் தலைவர் தேர்வு செய்யப்படுவார்.

iii. மேற்கண்ட தகுதிவாய்ந்த உறுப்பினர்களில் துணைத் தலைவராக ஒருவர் தெரிவுச் செய்யப்பட ஒரு உறுப்பினர் முன்மொழிய வேண்டும். மற்றொரு உறுப்பினர் வழிமொழிய வேண்டும்.

iv. பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு நடைபெறும் நாளிலேயே துணைத் தலைவர் தெரிவுச் செய்யப்பட வேண்டும்.

v. ஒன்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் துணைத் தலைவராக விருப்பம் தெரிவிக்கும் நேர்வுகளில் உறுப்பினர்களின் ஆதரவை தெரிந்துக்கொள்ள

அவர்களின் கையை உயர்த்தி சம்மதம் தெரிவிக்கும் முறையைப் பின்பற்ற வேண்டும்.

vi. சம்மதம் தெரிவிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஒவ்வொரு போட்டியாளருக்கும் தனித் தனியாகக் கணக்கிட்டு இதற்கான படிவத்தில் குறித்துக் கொள்ள வேண்டும். (படிவம் - 4)

vii. அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்களின் ஆதரவைப்பெறும் நபரை தேர்ந்தெடுக்கப்பட்டவராக அறிவிக்க வேண்டும்.

viii. சமமான எண்ணிக்கையில் உறுப்பினர்களின் ஆதரவு இருக்குமானால், அவர்களின் பெயர்களைக் காகிதத் துண்டில் எழுதி அட்டைப் பெட்டியில் போட்டுக் குலுக்கல் முறையில் ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும்.

ix. துணைத் தலைவர் தெரிவுக்கான முன் மொழிதல், வழி மொழிதல் மற்றும் பெற்ற ஆதரவு விவரங்களை இதற்கான படிவத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும். இந்த படிவத்தில் உறுப்பினர்கள் அனைவரின் கையொப்பம் பெறவேண்டும்.

<u>முக்கிய குறிப்புகள்:</u>

i. அனைவரையும் கண்ணியத்தோடு நடத்துவதை தலைமையாசிரியர் உறுதி செய்ய வேண்டும்.

ii. பள்ளி மேலாண்மைக்குழுவின் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தெரிவுச் செய்யப்பட்ட பிறகு தலைவர் மற்றும் துணைத் தலைவர் இருவரும் பெற்றோர்களுடன் பள்ளி வளர்ச்சி குறித்து பேசுதல் வேண்டும்.

iii. இறுதியாக, உறுப்பினர்கள் அனைவரும் கூட்டப்பதிவேட்டில் கையெழுத்திட வேண்டும்.

iv. அனைத்து உறுப்பினர்களின் கைபேசி எண் மற்றும் முகவரியைத் தவறாமல் பதிவேட்டில் குறித்து வைத்துக் கொள்ளவேண்டும்.

v. தேர்வு செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலைப் அவர்களின் பொறுப்பு விவரங்களுடன் பள்ளியின் அறிவிப்பு பலகையில் அனைவரும் பார்க்கும் படியான இடத்தில் ஒட்டவேண்டும்.

vi. தேர்ந்தெடுக்கப்பட்ட இருபது உறுப்பினர்களும் ஒரு குழுவாகப் புகைப்படம் எடுத்துக்கொள்வது சிறப்பாக இருக்கும்.

vii. தெரிவ செய்யப்பட்ட உறுப்பினர்களின் பட்டியல் மற்றும் அவர்களது குழு புகைப்படம் EMIS தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

தேர்வு செய்யப்பட்டவர்களின் முழு விவரம் பள்ளி மேம்பாட்டுத்திட்ட செயலியில் பதிவிட வேண்டும். உறுப்பினர்களின் பதவி மற்றும் பிரதிநிதித்துவம் குறித்துப் பள்ளிக்கல்வித்துறையின் அரசாணை நிலை எண்-42, நாள் 06.03.2019- இல் கூறியுள்ளவாறு தவறாமல் பின்பற்றி பள்ளி மேலாண்மைக்குழுக்களை மறுகட்டமைப்பு செய்யப்பட வேண்டும்.

இணைப்பு: அழைப்பிதழின் நகல்

16/3/22

மாநில திட்ட இயக்குநர்

## பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு 2022 – 23

பள்ளியின் பெயர்: UDISE Code:

ஒன்றியம்: மாவட்டம்:

படிவம் – 1

### மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் விவரம்

| வ.எண் | மாணவர் பெயர் | பயிலும் வகுப்பு | பெற்றோர் பெயர் | பெற்றோர் முகவரி | பெற்றோர் கையொப்பம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

# பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு 2022 – 23

பள்ளியின் பெயர்: UDISE Code:

ஒன்றியம் : மாவட்டம் :

படிவம் - 2

## உறுப்பினர்களுக்கான தெரிவு

| வ. எண் | விருப்பம் தெரிவித்த பெற்றோர்களின் பெயர் | முன் மொழிந்தவர் பெயர் | வழி மொழிந்தவர் பெயர் | ஆதரவு தெரிவிக்கும் பெற்றோர்களின் எண்ணிக்கை | தேர்ந்தெடுக்கப்பட்டாரா / இல்லையா ஆம்/இல்லை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

கையொப்பம்:

| தலைமையாசிரியர் | உள்ளாட்சி பிரதிநிதிகள் | ஆசிரியர் | பெற்றோர்கள் |
|---|---|---|---|
| 1. | 1. | 1. | 1. |
| | 2. | | 2. |

# பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு 2022 – 23

பள்ளியின் பெயர்: UDISE Code:

ஒன்றியம் : மாவட்டம் :

படிவம் – 3

## தலைவருக்கான தெரிவு

| வ. எண் | விருப்பம் தெரிவித்த உறுப்பினர்களின் பெயர் | முன்மொழிந்தவர் பெயர் | வழிமொழிந்தவர் பெயர் | ஆதரவு தெரிவிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை | தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் பெயர் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரின் பெயர்:

| வ. எண் | உறுப்பினர்களின் கையொப்பம் | வ. எண் | உறுப்பினர்களின் கையொப்பம் |
|---|---|---|---|
| 1 | | 11 | |
| 2 | | 12 | |
| 3 | | 13 | |
| 4 | | 14 | |
| 5 | | 15 | |
| 6 | | 16 | |
| 7 | | 17 | |
| 8 | | 18 | |
| 9 | | 19 | |
| 10 | | 20 | |

## பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு 2022 - 23

பள்ளியின் பெயர்: UDISE Code:

ஒன்றியம்: மாவட்டம் :

படிவம் - 4

### துணைத்தலைவர் தெரிவு

| வ. எண் | விருப்பம் தெரிவித்த உறுப்பினர்களின் பெயர் | முன்மொழிந்தவர் பெயர் | வழிமொழிந்தவர் பெயர் | ஆதரவு தெரிவிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை | துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் பெயர் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட துணைத்தலைவரின் பெயர்:

| வ. எண் | உறுப்பினர்களின் கையொப்பம் | வ. எண் | உறுப்பினர்களின் கையொப்பம் |
|---|---|---|---|
| 1 | | 11 | |
| 2 | | 12 | |
| 3 | | 13 | |
| 4 | | 14 | |
| 5 | | 15 | |
| 6 | | 16 | |
| 7 | | 17 | |
| 8 | | 18 | |
| 9 | | 19 | |
| 10 | | 20 | |

## பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு 2022 – 23

பள்ளியின் பெயர்: UDISE Code:

ஒன்றியம்: மாவட்டம்:

படிவம் – 5

**பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களின் விவரம்**

| வ.எண் | பெயர் | பதவி | தொலைப் பேசி எண் | முகவரி | கையொப்பம் |
|---|---|---|---|---|---|
| 1 | | தலைவர் | | | |
| 2 | | துணைத்தலைவர் | | | |
| 3 | | தலைமையாசிரியர் ( உறுப்பினர் மற்றும் கூட்ட அழைப்பாளர்) | | | |
| 4 | | ஆசிரியர் பிரதிநிதி | | | |
| 5 | | பெற்றோர் பிரதிநிதி | | | |
| 6 | | பெற்றோர் பிரதிநிதி | | | |
| 7 | | பெற்றோர் பிரதிநிதி | | | |
| 8 | | பெற்றோர் பிரதிநிதி | | | |
| 9 | | பெற்றோர் பிரதிநிதி | | | |
| 10 | | பெற்றோர் பிரதிநிதி | | | |
| 11 | | பெற்றோர் பிரதிநிதி | | | |
| 12 | | பெற்றோர் பிரதிநிதி | | | |
| 13 | | பெற்றோர் பிரதிநிதி | | | |
| 14 | | பெற்றோர் பிரதிநிதி | | | |
| 15 | | பெற்றோர் பிரதிநிதி | | | |
| 16 | | பெற்றோர் பிரதிநிதி | | | |
| 17 | | உள்ளாட்சி பிரதிநிதி | | | |
| 18 | | உள்ளாட்சி பிரதிநிதி | | | |
| 19 | | கல்வியாளர்/ புரவலர் / தன்னார்வ அமைப்பினர் / ஒய்வு பெற்ற அலுவலர் | | | |
| 20 | | சுய உதவி குழு உறுப்பினர் (பெற்றோர்) | | | |

# அழைப்பிதழ்

**மார்ச் 20, ஞாயிறு காலை 10 மணி**

## வணக்கம்!

நம் ஊரில் உங்கள் பிள்ளை பயிலும் அரசுப் பள்ளிக்கு உங்களை வரவேற்கிறோம்.

இது உங்கள் பள்ளி. நாம் இணைந்துதான் பள்ளியை மேம்படுத்தவேண்டும். பள்ளியின் ஒவ்வொரு கட்ட வளர்ச்சியிலும் பெற்றோராகிய உங்கள் பங்கு இருப்பது அவசியம். உங்களுடைய சிறப்பான பங்களிப்பை மேலும் வலுப்படுத்துவதற்காகவே பள்ளி மேலாண்மைக் குழுக்கள் உள்ளன.

பள்ளியின் சூழல் மேம்படுவதற்கு நீங்கள் எவ்வாறு உதவமுடியும்?
அங்கே மாணவர்கள் கல்வி கற்பதற்கான அனைத்து வசதிகளும் இருப்பதை எவ்வாறு உறுதிப்படுத்துவது?
தரமான சுவையான மதிய உணவை உத்தரவாதப்படுத்த என்ன செய்யலாம்?,
பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த எவ்வாறு பங்களிக்கலாம்?
தரமான கல்வி அவர்களுக்குக் கிடைக்கும் சூழலை அவர்களுக்கு எவ்வாறு மேம்படுத்தித் தருவது?
பாடப் புத்தகம் தாண்டி அவர்களுடைய இதரத் திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்பளிப்பதில் நம்முடைய பங்கு இருக்கலாமா?

இப்படி பல கேள்விகள் பெற்றோராகிய உங்களுக்கு இருக்கக்கூடும். இவற்றுக்கான விடையை நீங்கள் அறிந்துகொள்ளும் முயற்சியாகத்தான் பள்ளி மேலாண்மைக் குழுக்களை உங்கள் பங்கேற்புடன் அரசு மறுகட்டமைப்பு செய்யவுள்ளது.

பள்ளி மேலாண்மைக் குழு என்பது பெற்றோர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் போன்ற 20 உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழு.

- குழுவின் தலைவராக அப்பள்ளியில் பயிலும் ஒரு குழந்தையின் பெற்றோர்தான் இருக்கவேண்டும். இதில் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.
- அப்பள்ளியில் பயிலும் மாற்றுத் திறனாளி குழந்தையின் பெற்றோர், அப்பள்ளியில் பயிலும் மாணவர்களின் பெற்றோராக உள்ள தூய்மைப் பணியாளர்கள், எய்ட்நோயாளிகள் மற்றும் திருநங்கைகள் எஸ்.சி, எஸ்.டி பிரிவைச் சேர்ந்த மாணவர் ஒருவரின் பெற்றோர் ஆகியோரில் ஒருவரே துணைத் தலைவராக தேர்வு செய்யப்படுவார்.
- தலைமையாசிரியர் குழுவின் உறுப்பினர் மற்றும கூட்ட அழைப்பாளராக இருப்பார்
- ஆசிரியர் ஒருவர் உறுப்பினராக இருப்பார்

- எஸ்.சி, எஸ்.டி, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த குழந்தைகளின் பெற்றோர் 12 பேர் உறுப்பினர்களாக இருப்பார்கள். (12- உறுப்பினர்களில் பெண்கள் 7 பேர் இருக்க முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது)
- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் குழுவில் இருப்பார்கள். (அவர்களில் ஒருவர் பெண் உறுப்பினராக இருக்க முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது)
- கல்வி ஆர்வலர் அல்லது புரவலர் அல்லது அரசு சாரா அமைப்பினர் அல்லது ஓய்வு பெற்ற ஆசிரியர் – இவர்களின் யாரேனும் ஒருவர் உறுப்பினராக இருப்பார்.
- சுய உதவிக் குழுவில் இருக்கும் பெற்றோர் ஒருவர் உறுப்பினராக இருப்பார்.
- இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இக்குழு மாற்றி அமைக்கப்படும்.
- பள்ளி அமைந்திருக்கும் ஊர் மக்களின் பங்களிப்போடு, பள்ளியின் தேவைகளை நிறைவேற்றி குழந்தைகளுக்கு தரமான கல்வி கிடைப்பதை இக்குழுவின் உறுப்பினர்கள் உறுதி செய்வார்கள்.

எனவே, பெற்றோர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உட்பட அனைவரும் இணைந்து நம் பிள்ளைகள் பயிலும் பள்ளியை கற்றலுக்கு மேலும் உகந்த இடமாக ஆக்கி நமது பள்ளியாக மாற்றுவோம்.

**அனைவரும் வாருங்கள் !**

**பள்ளி மேலாண்மைக் குழுக்களை வலுப்படுத்துவோம்!**

**அரசுப் பள்ளிகளை வளப்படுத்துவோம் !**

